# மந்திரி சபையில் மாறுதல்?

## துரையப்பா, மஜித் உதவி மந்திரிகளாவர்?

**சிறிமாவோ மந்திரிசபையில் இனி மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது!-விரைவில் மந்திரிசபை விஸ்தரிக்கப்படும்! அரசாங்கத்துக்கு பலதடவைகளில் ஒத்துழைப்புக் கொடுத்து பதவிக்காக காத்துக்கொண்டிருக்கும் சுயேச்சைப் பிரதிநிதிகளுக்கு ஏதாவது கைமாறு செய்யவேண்டும் என்றபேச்சு கட்சித் தலைமைப் பீடத்தில் வலுப்பெற்று வருகின்றது.**

முன்பும் இந்த மந்திரி சபை விஸ்தரிப்பு பற்றி சில தடவைகளில் பேசிக் கொள்ளப்பட்ட போதிலும் யூ.என்.பி. யினதும்மற்றும் எதிர்க்கட்சிகளினதும் பெருத்தகண்டனத்துக்குஉள்ளாகலாம் என அஞ்சி விஸ்தரிப்பு விஷயம் ஒத்திப்போடப்பட்டதாம். பட்ஜட் பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்று விட்டதாலும், சமசமாசக் கட்சி தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பது என மத்திய கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாலும், இனி மந்திரி சபையை விஸ்தரிக்கலாம் என ஆளும் கட்சித் தலைமைப்பீடம் முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

சுகாதார அமைச்சர், செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா தொடர்ந்து அடிக்கடி சுகவீனமுற்று மந்திரி சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாமலிருப்பதால், அவருக்கு ஓய்வு கொடுத்து மந்திரி சபையிருந்து நீக்கிவிட்டு, அந்த ஸ்தானத்துக்கு புதிய மந்திரி ஒருவரை நியமிக்கும்போது கூடவே மந்திரி சபையில் விஸ்தரிப்பும் நடைபெறலாம்.

இதற்கு ஆதாரமாக இன்னும் ஒரு விடயமும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதுவரை நாளும் சுயேச்சையாக இருந்து அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்து வரும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா விரைவில் அரசாங்கக் கட்சியில் சேர்வதற்குத் தீர்மானித்துள்ளாராம். 'சோழியன் குடுமி சும்மா ஆடாது'. நிச்சயம் மந்திரி சபையில் விஸ்தரிப்பும் மாற்றமும் நிகழ இருப்பதை தெரிந்து கொண்டுதான் வெளிப்படையாகவே திரு. துரையப்பா ஆளும்கட்சியில் சேரஎண்ணி உள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. திரு. துரையப்பாவுக்கும் மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீத்துக்கும் உதவி மந்திரிப்பதவிகள் கிடைக்கலாமென்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறதாம்.

## கோறண மேந்தில் கோழி மேய்த்தவர்!




## 'புதினம்'

அடுத்த இதழ்

தீபாவளிச்

சிறப்பு

இதழ்

[3-ம் பக்கத்தில் விபரங்கள்]

## "புதினத்தின் செய்தியும் தமிழரசுத் தலைவரின் அறிக்கையும்"

இதுபற்றிப் 'புதினம்' ஆசிரியரின் கருத்தை இந்த இதழின் இரண்டாம் பக்கத்தில் பார்க்கவும்


# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

பக்கங்கள் 8 | விலை சதம் 15 | மலர் 1 | 29-10-61 ஞாயிறு | இதழ் 20

# 'புதினம்' செய்தியும் தமிழரசுத்தலைவர் அறிக்கையும்.

சென்ற வாரம் புதினத்தின் முதலாம் பக்கச் செய்தி தமிழ் மக்களைத் திடுக்கிடவைத்திருக்கிறது. 'நாகநாதன்-இராசதுரைமோதல்' 'போராட்டப் புலிகளின் பதவி வேட்டை' என்ற தலைப்புகளின் கீழ் வெளியான செய்தியைப் படித்துவிட்டு, வாசகர்கள் எழுதும் கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். சில பத்திரிகைகளின் 'விஷமத்தனமான அந்த'ச் செய்தியை தமிழரசுத் தலைவர் வன்மையாகக்கண்டித்திருக்கிறார், தலைவருக்குப் பதில் சொல்ல நாம் தவறினாலும், நூற்றுக்கணக்கான கடிதங்களை எழுதியிருக்கும் புதினம் வாசகர்களுக்குப்பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.

முக்கியமாக ஒரு விஷயத்தை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறோம். புதினம் எந்த ஒரு அரசியல் கட்சிப் பத்திரிகையுமல்ல. கட்சி சார்பும் புதினத்துக்குக் கிடையாது,

தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களின் நலனுக்காகப் பெரிதும் உழைக்கின்ற ஒரே காரணத்தினாலேயே அந்தக் கட்சியை புதினம் ஆதரிக்கிறது. அதற்காக, கட்சிக்குள் நடைபெறும் ஊழல்களைத் தெரிந்து கொண்டு புதினம் வாய் மூடி மௌனியாக இருக்க வேண்டுமா?

கட்சியின் சொந்தப் பத்திரிகையானால் மௌனம் சாதிக்க முடியும். மூடிமறைக்கவும் முயலலாம். ஆனால், புதினம் அப்படிச் செய்ய முடியாது.

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தலைவர்கள் கேவலம் ஒரு செனட்டர் பதவி குறித்து குத்து மல்லுப் படுவது பரிதாபத்துக்குரிய விஷயமல்லவா? 'ஏன்' என்று கேட்பாரில்லாமல் இப்படிச் சுயநல வேட்டைகள் வளருமானால் கட்சியின் தலைவிதியே தலைகீழாக மாறிவிடாதா? தமிழரசுக் கட்சிக்குள் இன்று ஏற்படும் சீர்கேடு, தமிழ் மக்கள் அத்தனை பேரையுமே பாதிக்குமென்பதை எவரும் மறுக்க முடியாது! இந்த நிலையில் சீர்கேடுகள் மூடிமறைக்கப்படுவதனால்,—அது வெறும் வெளிப்பூச்சாகத்தானிக்கும். உள்ளுக்குள் விரைவாக உக்கிப்போகும்!

செனட்டர்பதவிக்காக எத்தனை காவடிகள் எடுக்கப்பட்டன என்பதையும், அதற்காக நடைபெற்ற களேபரங்களையும் பற்றி நாம் இங்கே இப்போது விபரிக்க வேண்டியதில்லை.

சென்ற வாரம் கொழும்பில் நடைபெற்ற தமிழ்ப் பிரதிநிதிகள் கூட்டத்தில்நடைபெற்ற விஷயங்களையும் அதனால் ஏற்பட்ட எதிரொலிகளையுமே சென்ற வார இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

அது நல்ல பலனைத் தந்திருக்கிறதென்றே இப்போது கருதுகிறோம்.

குறித்த கூட்டம் எவ்வித குழப்பமும் இல்லாமல், ஒழுங்காக நடைபெற்றதென்றும் செனட்டர் தெரிவு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதென்றும், திரு. இராசமாணிக்கம் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிடுவதையும், அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பெருந்தன்மையோடு எவ்வித மறுப்பும் எழுப்பாமலிருப்பதையும் கண்டு மகிழ்கிறோம்.

செனட்டர் விஷயம் முடிந்த கதை.

இனியாவது எமது தலைவர்கள் இத்தகைய செய்திகள் புதினத்துக்குக் கிடைக்காமலிருக்கச் செய்வார்களென்று நம்புகிறோம்!

—ஆசிரியர் 'புதினம்'

# செனட் தேர்தல் எதிரொலிகள்!

## மட்டக்களப்பிலிருந்து புதிய செய்திகள்

### காசுக்கு வாங்கலாம்!

கொழும்பு, கோட்டை புகையிரத நிலையம். நேரம் இரவு 8 மணி. செனட்டராக ஆலாய்ப் பறந்து திரிந்த அதிர்ஷ்டசாலியும் அவரது கொழும்பு ஏஜண்டும் மட்டக்களப்புப் பேர்வழியை மறித்துப் பேசுகிறார்கள். ''எப்படி இருக்கு செனட் விஷயம்?''

''மட்டக்களப்பு மாவட்ட கொமிற்றிக்கு விடப்பட்டிருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் பலமாக நிலவுகிறது.''

''என்ன கொமிற்றி? கொமிற்றியில் யார் இருக்கிறான் நல்லவன் பெரியவன்? எல்லாரையும் காசுக்கு வாங்கி விடலாம்.''

### செனட் தாடி.

தடுப்புக் காவலிலிருந்து இரண்டு மாதத்திற்கு முன் வெளிக்கிட்ட மட்டக்களப்பு இளம் அரசியல் வாதியொருவர் தாடியுடன் நடமாடித் திரிந்தார். எம்.பி.க்கள் எல்லோரும் விடுதலையானபின்னும் அவர் தாடியுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார். சென்ற வெள்ளிக்கிழமை 20-10-61 பிற்பகல் அவர் தாடியைக் காணவில்லை. அன்று காலை வெளிவந்த தினசரிப் பத்திரிகைகளில் செனட்டர் தெரிவு முடிவு வந்ததும் மகிழ்ச்சியுடன் தாடியை வழித்துக் கொண்டாராம்.!

### மாணிக்கம்வெற்றி!

மட்டக்களப்புத் தொகுதியில் இரண்டு வாக்குகளைப் பிரித்து ஒவ்வொரு அபேட்சகருக்கும் வழங்க வேண்டும் என்று தந்தை செல்வநாயகத்திடம் திரு. மாணிக்கம் முன்னொரு முறை பேசிய பொழுது, 'இராசதுரையின் தோல்வி தமிழரசுக் கட்சியின் தோல்வியல்ல. அது இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களின் தோல்வி' என்று தந்தை செல்வநாயகம் சூடாகப் பதிலளித்தார். இருப்பினும் 'செனட்' தெரிவில் இன்று .....ஆம் அது இராசதுரையின் தோல்விதான்!

### இன்னும் இவர் தமிழரசிலா?...

சென்ற பொதுத் தேர்தலில் கற்குடாத் தொகுதியில் தமிழரசு அபேட்சகருக்கு எதிராக வேலைசெய்த திரு. ஏ. சண்முகநாதனை 1961ம் ஆண்டு தைமாதம் நடந்த தமிழரசுக் கட்சிக் காரியக்கமிட்டி தெரிவில் மாணிக்கம் கோஷ்டியின் சார்பில் சாம் தம்பிமுத்து இவர் பெயரை பிரேரிக்கமைசூர் மௌலானா அனுமதித்தார்.

சென்ற மாதம் சிங்கள சிறிபஸ்களை மட்டக்களப்புக்கு அனுப்புமாறு பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இவர்தான் திரு. மாணிக்கம் செனட்டராகி மட்டக்களப்பு வரும்பொழுது அவரை வரவேற்க குழு அமைத்தவரும் அதன் தலைவருமாவர்!

செனட்டர் முடிவுக்குப்பின் திரு. மாணிக்கம் மிகமிகத் தூரத்திலுள்ள பொத்துவில், நிந்தாவூர், கல்முனை, பட்டிருப்பு, கல்குடா எம். பி.க்களின் வீடுகளுக்கெல்லாம் தன் குடும்பத்துடன் திக்கு விஜயம் செய்தாராம். ஆனால் மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. இராசதுரை வீடு தன்வீட்டுக்கு மிகச் சமீபத்தில் இருந்த பொழுதிலும் திரு. மாணிக்கம் போகாத காரணம் என்ன?...

### இராசதுரையின் நிலை.

அரசியல் எதிரிகளால் தோற்கடிக்கப் படமுடியாத திரு. இராசதுரை விரைவில் தமது அரசியல் நண்பர்களால் பலநெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டி வரப்போகிறதாம்.

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

29-10-61 முதல் 5-11-61 வரை

**மேடம்;** உங்கள் பிரச்சனைகள் சில தீர்வதற்கு இடமுண்டு. தொழில் விஷயத்திலும் சில முன்னேற்றம் காணப்படுகிறது. அந்நியர் மூலமாகப் பல உதவிகள் கிட்டும். ஆனால் குடும்பத்தில் சிறு சச்சரவுகள் காணப்படுகின்றன.

**இடபம்:** உங்கள் சொந்த விஷயங்களால் அபிவிருத்தி காணப்படுகின்றது. சத்துரு ஜயமும், முன் முதலீடு செய்தவற்றால் லாபமும் கிட்டும். பூமிப் பிரயோசன பலனும் உண்டு. சகோதரரால் நன்மை ஏற்படும்.

**மிதுனம்;** குடும்பச் சச்சரவும், குழந்தைகளுக்குச் சுகவீனமும் காணப்படுகின்றது. இரகசிய சத்துருக்களால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம். மனதில் அமைதி நிலவாது. பிரயாசமதிகமாக இருக்கும், தேகசுகத்தைப் பேணவும்,

**கடகம்:** தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பத்தில் பலவித சங்கடங்கள் ஏற்படலாம். ஆனால் பொருள் விஷயத்தில் முன்னேற்றமுண்டு. புதிய தொழில்களால் லாபம் கிட்டும்.

**சிங்கம்;** சொந்த விஷயங்களிலும், தொழில் விஷயங்களிலும் சிறு முன்னேற்றம் உண்டு. எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும். முன்முதலீடு செய்தவற்றால் லாபம் கிட்டும்,

**கன்னி:** தொழில் விஷயத்தில் விசேஷ அபிவிருத்தி காணப்படுகிறது. இனத்தவரும் நண்பர்களும் பலவிதத்தில் உதவி செய்வர். பொருள் விருத்தியுண்டு. ஆனால்தேகசுகம்சிறிது பாதிக்கப்படலாம்.

**துலாம்:** இந்தவாரம் மனதில் அமைதி நிலவாது. பிரயாசம் அதிகமாகவே காணப்படுகிறது. தேகசுகமும் தொடர்ந்து பாதிக்கப்படும். இனசன விரோதமும், ஏமாற்றமும் ஏற்படும்.

**விருச்சிகம்:** வாரத்தின் முதல் நாளை அவதானமாகச் செலவிடவும். செலவினங்கள் அதிகமாகும். பிதாவழி பந்துக்களால் சங்கடங்கள் ஏற்படலாம். ஆனால் நண்பர்களால் உதவி கிட்டும்.

**தநுசு:** வாரத்தில் முதல் நாளில் எடுத்த கருமங்களில் வெற்றியுண்டு. திங்கள். செவ்வாய், புதன் வாரங்களில் சில சங்கடங்கள் ஏற்படலாம். மிகுதி நாட்களில் தொழில் முன்னேற்றமும், லாபமும் கிட்டும்.

**மகரம்;** வார முற்பகுதியில் தொழில் விஷயங்களில் அபிவிருத்தி உண்டு. ஆனால் மனதில் அமைதி நிலவாது. வியாழன், வெள்ளி வாரங்களையும், சனி காலையையும் அவதானமாகச் செலவிடவும். சனி பிற்பகல் நன்மையாக இருக்கும்.

**கும்பம்:** சில தொல்லைகள் நீங்கும். குடும்பச் சூழ்நிலையிலும் சில திருத்தங்கள் ஏற்படும் எதிர்ப்புகளைச்சமாளித்து முன்னேற முடியும். சத்துரு ஜயமும் உண்டு. சனிபிற்பகலை அவதானமாகச் செலவிடவும்.

**மீனம்:** குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இராது. வயிற்றில் சுகவீன முண்டாகலாம். ஆனால்தொழிலில் முன்னேற்றமும், நண்பர்கள் சகாயமும் கிட்டும்.

# திரை மறைவில்

## கிறிஸ்மஸ் தாத்தா

தடுப்புக் காவலிலிருந்து விடுதலையடைந்த தமிழ்ப் பிரதிநிதிகள் சென்றவாரம் பாராளுமன்றத்திற்குச் சென்றார்களல்லவா? அப்பொழுது மன்னார்ப் பிரதிநிதி வி. ஏ. அழகக்கோன் அழகிய வெண்தாடியுடன் காட்சியளித்தார். அவரைப் பார்த்தவர்களெல்லாரும் "கிறிஸ்மஸ் தாத்தா" "கிறிஸ்மஸ் தாத்தா" என்று அழைத்தார்கள்.

## மறு; முடியாவிட்டால் பாய்!

மந்திரிசபையிலுள்ள கருத்துவேறுபாடுகள்பற்றிய செய்திகள் வெளியே வந்துவிட்டால் முதலில் செய்தியை மறுத்துரை; அதை மக்கள் நம்பார்களென்றுநினைத்தால் பத்திரிகைக் காரர்கள்மீதுபாய்"
—பீலிக்ஸ் தந்திரம்.

## மறுபடியும் அடிபடும் பேச்சு

மந்திரி சபை விஸ்தரிக்கப்படும் என்ற செய்தி அடிபடுகிறதல்லவா? அந்தச் செய்தியுடன் ஒரு தமிழ்ப் பிரதிநிதிக்கும் ஒரு முஸ்லிம் பிரதிநிதிக்கும் அரைமந்திரிப் பதவி கிடைக்கக்கூடும் என்ற செய்தியும் அடிபடுகிறதாம்.

## சிறந்தது குறுக்குவழி

'புகழேணியை அடைய இரண்டு வழிகளுண்டு: தன் இனத்தின் மேன்மைக்காகப் போராடுவது முதலாவது. நீண்டபாதை இது. இனத்தைக் காட்டிக் கொடுத்தவரது பதவியில் ஏறி அமர்ந்து கொள்வது இரண்டாவது வழி குறுக்குவழியும் இதுதான்'
—பிரட்டுமொழி.

## முகஸ்துதியா? உண்மையா?

சென்றவாரம் நடந்த சம்பவம் இது. நிதி அமைச்சருடன் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் தமிழ்ப் பிரதிநிதியொருவர் பேசிக்கொண்டிருந்தாராம். கட்சியில் சேர்ந்து கொள்ளுமேன் என்று கேட்டார் முஸ்லிம் பிரதிநிதி தமிழ்ப்பிரதிநிதியை. "சேரத்தான் போகிறேன்" என்ருர் தமிழ்ப்பிரதிநிதி.

## லஞ்சமும் பதவியும்

"வாழிய இலஞ்சம்
வாழ்க நற் பதவிகள்"—பதவியார் பாடல்.

## தாடியிலும் போட்டியா?

தடுப்புக் காவலிலிருந்து விடுதலையடைந்த தமிழ்ப் பிரதிநிதிகளில் இருவர் தாடி வைத்திருக்கிறார்களல்லவா? அவர்களைப் போலவே சிறைக்குச் சென்று திரும்பிய ராஜரத்தினக் கோனும் தாடி வைத்திருக்கிறார். தமிழ்ப்பிரதிநிதிகள் சனப்பிரதிநிதிகள் சபைக்குச் சென்றதினத்தன்று ராஜரத்தினக் கோனும் சபையின் 'லொபி'யில் காணப்பட்டார்.

## மோசமானசெய்திகள்

தமிழரசுக் கட்சியின் சார்பில் செனட் தேர்தலுக்கு அபேட்சகர் ஒருவரைத் தெரிந்து எடுப்பதற்காகக் கூடிய கூட்டத்தில் பெரும் வாக்குவாதங்கள் நடைபெற்றதாக "புதினத்"தில் வெளிவந்ததல்லவா? சம்பிரதாயத்திற்காகத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் மறுத்துரைத்துள்ள போதிலும் "புதினத்"தில் செய்தியாக வெளிவந்தது அவ்வளவும் உண்மை. ஆனால் என்றுமில்லாத முறையில் தமிழரசுக் கட்சிக்குள் அவ்வளவு கருத்து வேறுபாடுகள் எழக்காரணமென்ன என்பதை உள்விழுந்து ஆராய்ந்ததில் இன்னும் பல மோசமான செய்திகள் தெரியவருகின்றன. அவைகளையெல்லாம் இப்போது அம்பலத்தில் அவிழ்க்காமல் விடுவோம். ஒருமுறை பிட்டுக்காட்டியிருக்கிறோம் இனியாவது இத்தகைய சின்னத்தனங்களைப் பெரிய மனிதர்கள் கைவிடுவார்களென்று எதிர்பார்ப்போம்.

## மாணிக்கராசாவின் பெயர்புகுந்த விதம்.

செனட்சபைத் தேர்தல் அபேட்சகர்கள் பற்றி யோசிக்கும்போது தமிழ்ப்பிரதிநிதிகள் திருமலையைச் சேர்ந்த புரொக்கிராசி மாணிக்கராசாவின் பெயரையும் பரிசீலனை செய்தார்களல்லவா? அப்பெயர் இழுக்கப்பட்ட சம்பவம் மிக்வும் ருசிகரமானது. கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்பது முதலில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்தாற்போல் மாணிக்கத்தையோ அரியநாயகத்தையோ நியமிப்பது என்பது பற்றிய விவாதம் ஆரம்பமாகியது. திருமலைப் பிரதிநிதி உடனே தலையிட்டார். "நானும் கிழக்கு மாகாணத்தவன்தான். இரண்டுபேரையும் விட்டுவிட்டு வேறொருவரைத் தெரிந்தெடுப்பதே சிறந்தது. எனவே, புரக்கிராசி மாணிக்கராசாவை நான் பிரேரிக்கிறேன். அவரும் கட்சிக்கு உழைத்தவர். என்ருர் திருமலைப் பிரதிநிதி. விவாதத்தின்பின் திரு. மாணிக்கமே தெரிவு செய்யப்பட்டார்.

## சமசமாஜிகளின் கடிதம்

வெள்ளிக்கிழமை நடந்த செனட் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகரைச் சமசமாசக் கட்சிப் பிரதிநிதிகள் ஆதரித்தார்களல்லவா? இதற்குப்பிரதியுபகாரமாக இரண்டாண்டுகட்குப் பின்பு நடைபெறவிருக்கும் செனட் தேர்தலில் சமசமாசக்கட்சி அபேட்சகரை தமிழ்ப் பிரதிநிதிகள் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் கடிதமொன்றைச் சமசமாசக் கட்சியினர் தமிழரசுக்கட்சிக்கு அனுப்பி வைத்திருக்கின்றனராம்.

## செனட்டின் எதிர்க்கட்சித் தலைவர்

செனட்சபையில் சமசமாசக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் டொரிக் டி சூசாவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு இப்பொழுது முயற்சிகள் நடைபெறுகின்றன. செனட்டர் டொரிக் டி சூசாவை ஆதரிப்பதென தமிழரசுக்கட்சி முடிவுசெய்துள்ளதாம்.

— அம்பலத்துறைவோன்

## கவிஞர் கண்ணதாசன் கதாசிரியர் கருணாநிதி போட்டி!

வரப்போகும் தமிழ் நாடு சட்டசபைத்தேர்தலில் சினிமா கதாசிரியர் கருணாநிதி சென்னை மயிலாப்பூர் தொகுதியில் ஒரு அபேட்சகராக நிற்க எண்ணியிருக்கிறார். கருணாநிதி தி.மு.க. உறுப்பினர்.

கவிஞர் கண்ணதாசன் தமிழ் தேசியக்கட்சி ஆதரவாளர். கவிஞர் கண்ணதாசன் தி. மு. க. வில் இருந்த நாளிலேயே அவருக்கும் கருணாநிதிக்கும் ஒத்து வருவதில்லை. இப்போது கண்ணதாசன் தி. மு. க. விலிருந்து விலகிவிட்டபடியால், கருணாநிதியை எதிர்த்து தேர்தலில் போட்டியிடப் போகிறார். "கருணாநிதி சென்னையில் எந்தத் தொகுதியில் நின்றாலும் சரி, அவரை எதிர்த்து நான் போட்டியிடுவேன். அவரை நிச்சயம் தோற்கடிப்பேன்!" என்று கண்ணதாசன் கூறியிருக்கிறார்.

கவிஞர் கண்ணதாசனுக்கு இப்பொழுது சினிமா உலகில் சுக்கிரதசை! இலக்கியச் சுவை மிகுந்த அவருடைய பாடல்களுக்கு சினிமா ரசிகர்களிடையே இப்போது மிகுந்த செல்வாக்கு உண்டு. சென்னை நகரில் கருணாநிதி போட்டியிட்டால் கண்ணதாசன் அவரை வீழ்த்திவிடுவாரென்றே பேசிக்கொள்ளப்படுகிறது.


அடுத்த இதழ்

★ 'புதினம்' தீபாவளிச் சிறப்பிதழ் ★

★ தீபாவளிக் கவியரங்கம்
ஈழத்தின் சிறந்த கவிஞர்களான முருகையன், நாவற்குழியூரான், மஹாகவி நீலாவணன், திமிலைத்துமிலன்

★ தீபாவளிக் கதையரங்கம்
ஈழத்தின் சிறந்த கதாசிரியர்கள் கனக. செந்திநாதன், சொக்கன், உதயணன், டானியல், பத்மாகாந்தன்.

★ தீபாவளிச் சேலை அலங்காரம்
அழகான பெண்கள், கவர்ச்சிகரமான சேலைகளை, நாகரிகமாக உடுத்தி அலங்கரிக்கிறார்கள்.

தீபாளிக் கார்ட்டூன் — மற்றும் பல சிறப்பான அம்சங்கள்

அழகிய வண்ண முகப்பு! — இத்தனைக்கும் விலை சதம் 15 மட்டும்!

**உங்களுடைய ஆயுளில் ஒருமுறை நீங்கள் சந்திரமண்டலப்பயணம் செய்ய நேரிடலாம்!...... அந்தச் சந்திர மண்டலத்தைப்பற்றி மேலும் சில தகவல்களைத் தருகிறார் 'பொன்னாலைக் குமாரசாமி.' படித்து வையுங்கள்.**

# சந்திர மண்டலம் பற்றி மேலும் சில தகவல்கள்.

— பொன்னாலைக் குமாரசாமி —

பாட்சாலையில் வேலை செய்த களைப்புத்தீரச் சுகமான தூக்கம் போட்டுவிட்டு எழுந்த நான் கதவுக்கு வெளியே யாரோ நிற்பதைக் கண்டதும் "உள்ளே வாருங்கள்" என்று அழைத்தேன். என்னுடைய மாணவர்களான மௌலானா, காமில், நவாஸ், பதகுல்லா ஆகியோர் உள்ளே நுழைந்தனர்.

விசாரித்ததில் மௌலானா வீட்டுக் கந்தூரிச் சாப்பாட்டுக்கு என்னை அழைக்கவே வந்திருக்கிறார்கள் எனத் தெரிந்தது.

"உலகத்தில் உள்ள மற்ற நாட்டுக்காரன் எல்லாம் புதுப்புதுக் குண்டுகளைக் கண்டு பிடிப்பதிலும், சந்திர மண்டலத்தை எட்டித் தொடுவதிலும் தங்களுடைய முயற்சிகளைச் செலவிடுகிறார்கள். இவர்கள் என்னடாவென்றால் பாடத்தைக் கூடச் சரிவரக் கவனிக்காமல் கந்தூரிச் சாப்பாட்டிலேயே கவனமாக இருக்கிறார்கள்" என்றார் கேட்டுக்கொண்டிருந்த எனது சக ஆசிரியர்.

அதைக் கேட்ட பதகுல்லா, "ஏன் சேர் சந்திரமண்டலத்துக்குப் போனால் கூட என்ன? சாப்பாடு இல்லாமல் இருக்க முடியுமா? மனிதனுக்குச் சாப்பாடு முக்கியம் தானே?" என்றான்.

"சேர்" என்றான் நவாஸ்.

"என்ன விஷயம்?" என்றேன்.

## சூரியனும் சந்திரனும் ஒரே அளவா?

"இங்கிருந்து பார்க்கும் போது சூரியனும் சந்திரனும் ஒரே அளவுள்ளனவாகத் தெரிகின்றனவே. உண்மை அப்படித்தானா?" என்றான்.

"சூரியன் சந்திரனைக் காட்டிலும் பன்மடங்கு பெரியது. சந்திரனின் குறுக்களவு 2160 மைலேதான். இது சூரியனின் குறுக்களவில் 400 ல் ஒருபங்குதான். இவ்வளவு சிறிதாகச் சந்திரன் இருந்தபோதிலும் அது சூரியன் அளவாகத் தோன்றுவதற்குக் காரணம் பூமிக்கு அண்மையில் இருப்பதுதான். சந்திரன் பூமியிலிருந்து 2,39,000 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தத் தூரமும் சூரியனின் தூரத்தில் 400 ல் ஒரு பங்குதான். சூரியனின் குறுக்களவில் 400 ல் ஒருபங்குள்ள சந்திரன், சூரியன் பிரகாசிக்கும் தூரத்தில் 400 ல் ஒருபங்கு தூரத்தில் இருப்பதால்தான், அது சூரியனின் அளவாகவே நமக்குத் தோன்றுகிறது" என்றேன் நான்.

"சந்திரன் எவ்வாறு தோன்றிற்று?" என்ற கேள்வியை எழுப்பினான் பதகுல்லா.

"சந்திரன் பூமியைச் சுற்றிவரும் உபகிரகம் என்பதும், சூரியனிலிருந்து பிரிவுபட்ட அக்கினித் தணல் பல்வேறு கிரகங்களாக உருண்டு திரண்ட காலத்தில், அக்கிரகங்கள் சூரியனை ஒரு ஒழுங்கான பாதையில் சுற்றிவர ஆரம்பித்தன என்பதும், அவ்வாறு தாறுமாறாகச் சுற்றின காலத்தில் ஒருசிறிய கிரகம் பூமிக்குச் சமீபமாக வர நேர்ந்ததென்றும், இந்தக் கிரகம் பூமியின் ஆகர்ஷண விசையில் சிக்கிக்கொண்டு விடுபடமுடியாமல் பூமியைச் சுற்றிய வண்ணம் இருக்கிறதென்பதும், அதுவேதான் சந்திரன் என்பதும் உண்மைதானே சேர்?" என்றான் காமில்.

"ஓம். நீ சொல்லியது உண்மைதான். இதுபோன்றுதான் மற்றைய கிரகங்களைச் சுற்றிவரும் உபகிரகங்களின் உற்பத்தியையும் விஞ்ஞானிகள் விளக்குகின்றார்கள். பூமியைப்போலவே இன்னும் ஐந்து கிரகங்களும் உபகிரகங்கள் உண்டு." என்று கூறிவிட்டு "சந்திரனைப் பற்றி உனக்கு வேறு என்ன தெரியும்?" என்று கேட்டேன்.

"சந்திரன் பூமியைப் போல திடப்பொருளாக இருக்கிறது. இதன் அடர்த்தி தண்ணீரைப்போல $3\frac{1}{2}$ மடங்கு. இதன் நிறை பூமியின் நிறையில் எண்பதில் ஒரு பங்கு. இதன் கவர்ச்சித் திறன் பூமியின் கவர்ச்சித் திறனில் ஆறில் ஒரு பங்குதான். இதனால் அங்குள்ள பொருட்களின் நிறையும் பூமியிலுள்ள பொருள்களின் நிறையில் ஆறில் ஒருபங்குதான் இருக்கும்" என்றான்.

"சந்திரனிலுள்ள கவர்ச்சித் திறன் மிகவும் குறைவான படியால் சந்திரன் காற்று மண்டலத்தைத் தன் வயமாக இழுத்துப் பிடித்துக்கொள்ளச் சக்தியற்றதாக இருக்கின்றது. சந்திரனைச் சுற்றி எவ்வித காற்று மண்டலமும் கிடையாது. காற்று மண்டலம் இல்லாமையால்தான் சந்திரனிலுள்ள களங்கங்களை நாம் நமது கண்களால் எளிதாகப் பார்க்க முடிகிறது." என்றேன் நான்.

"சந்திரன் பூமியைச் சுற்றிவர ஒரு மாதமா சேர் ஆகிறது?" என்றான் மௌலானா.

## சந்திரனின் சுழற்சி

"பொதுவாக ஒருமாதம் என்றுதான் சொல்கிறோம். ஆனால் சரியாகக் கணக்கிட்டால் 27 நாட்கள் 7 மணி 43 நிமிஷம் 14 விநாடிகள் ஆகின்றன. நாம் சந்திரனின் ஒரு பாகத்தைத்தான் எப்போதுமே பார்க்கிறோம். பூமியின் கவர்ச்சித் திறன் மிகவும் பலமாகச் சந்திரனைத் தன்வசம் இழுக்கின்ற காரணத்தால், சந்திரன் தன்னைத்தானே சுற்றமுடியாமல், தனது ஒரேபக்கத்தைப் பூமியின் பக்கமாகத் திரும்பியபடி சுற்றிவருகிறது. சந்திரன் மாதமொருமுறை பூமியைச் சுற்றிவரும்போது அதன் ஒருபாதி இரண்டு வாரங்களுக்குச் சூரியனை நோக்கியும், அதேபாதி மற்ற இரண்டு வாரங்களுக்கும் சூரியனுக்கு அப்பாலுமிருக்கும். சந்திரனின் பகற்காலம் தொடர்ந்து இரண்டுவார அளவு கொண்டது. அதைப்போலவே இரவுப் பொழுதும் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு இருக்கும். சூரியனது வெப்பம் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு சந்திரன்மீது படிவதால் அதன் வெப்பம் 110° பாகையளவுக்கு மேலும் உயர்ந்து விடும். இந்த வெப்பநிலையில் தண்ணீர் கொதித்து ஆவியாக மாறிவிடும். இதுபோலவே இரவுக் காலத்தில் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு சூரியனது வெப்பம் இதன்மீது படாதிருக்கின்ற காரணத்தால் இது மிகவும் குளிரான வெப்பநிலையை அடைகின்றது. காற்று மண்டலம் இல்லாததும், கொடிய உஷ்ணமும் குளிரும் மிகுந்ததுமான சந்திரனில் உயிர்கள் வாழ முடியாது" என்றேன் நான்.

காற்று மண்டலமின்மையாலும், வேறு பல மாற்றங்களாலும் சந்திர மண்டலத்தில் நிகழ்கின்ற அதிசய நிகழ்ச்சிகளைக் கூறுமாறு மாணவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு கேட்டனர்.

## அதிசயங்கள்

"ஒலி நாலா பக்கங்களிலும் பரவுவதற்கு காற்று மிக அவசியம். ஆனால் சந்திர மண்டலத்தில் காற்று இல்லாத காரணத்தால் அங்கு எப்பொழுதும் பரிபூரண நிசப்தமே குடிகொண்டிருக்கும். சந்திரனிலிருந்து ஆகாயத்தைப் பார்க்கும்போதும் நாம் ஒரு பெரிய மாற்றத்தை அவதானிக்க முடியும். சந்திரனிலிருந்து நாம் ஆகாயத்தைப் பார்ப்போமானால் அது நமக்கு நீல நிறமாகத் தோன்றாது. சூரியனிலிருந்து வெளிவருகின்ற வெண் நிற ஒளியில் வானவில்லில் தெரிகின்ற ஏழு வர்ணங்களும் உண்டு. உண்மையில் வெண்ணிற ஒளி என்பது வான வில்லிலுள்ள ஏழு நிறங்களினதும் கலவையேயாகும். சூரியனது வெண்ணிற ஒளி காற்றுத் துணிக்கைகளூடே பாயும் போது நீலவர்ணக் கிரணங்கள் மிகுதியாகச் சிதறுண்டு போகின்றன எஞ்சியவை மட்டும் ஊடுருவி வந்து பூமியை அடைகின்றன. நாம் வானத்தை நோக்கும் போது அங்கே சிதறுண்ட நீல நிறக் கிரணங்களைப் பார்ப்பதால் நமக்கு வானம் நீல நிறமாகத் தெரிகின்றது. சந்திரனில் காற்று இல்லையாதலால் அங்கு ஒளிச் சிதறல்களும் உண்டாவதில்லை எனவே சந்திரனிலிருந்து வானத்தைப் பார்க்கும் ஒருவருக்கு வானம் கருமையாகவே தென்படும்" என்றேன் நான்.

"சந்திரனில் உள்ள களங்கங்கள் எவை? அவை எப்படித் தோன்றின?" என்றான் மௌலானா.

## களங்கம் என்பது என்ன?

"சந்திரனைப் பார்க்கும் போது களங்கங்கள் தெரிவது உண்மைதான். சந்திரனில் தெரியும் கரிய பாகங்கள் சமுத்திரங்கள் என்றும், பிரகாசமான பாகங்கள் தரைப் பகுதிகள் என்றும் பழைய காலத்து விஞ்ஞானிகளான கலிலீயோ போன்றோர் நம்பினர். ஆனால் அது தவறு என்பது இப்போது தெளிவாகிவிட்டது. சந்திரனின் பரப்பை மிக நுணுக்கமாக உற்று நோக்கிய போது ஆழமான பெரிய குழிகள் பல தெரிவதை விஞ்ஞானிகள் அவதானித்துள்ளார்கள். இதுவே சந்திரனிலுள்ள களங்கமாக நமக்குத் தெரிகிறது. இக்குழிகள் எரிமலைகளின் வாய்களாக இருக்கலாமெனச் சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் வேறு சிலர் அதனை ஒப்புக்கொள்கின்றார்களில்லை. பூமியில் மலைத்தொடர்களை ஒட்டித்தான் எரிமலைகள் காணப்படுகின்றன. சந்திரனிலுள்ள எரிமலைகளின் வாய்களாகக் கருதப்படும் பெருங் குழிகளோ சந்திரனிலுள்ள சமவெளிப் பிரதேசங்களிலேயே காணப்படுகின்றன. எனவே இவை எரிமலையின் வாய்கள்தான் என நிச்சயமாகக் கூறமுடியாது. வேறு சில விஞ்ஞானிகள் கூறுவது போல இவை எரிகற்கள் விழுந்ததனால் ஏற்பட்ட குழிகளாகவும் இருக்கலாம்!" என்றேன் நான்.

"அப்படியானால் பூமியில் மட்டும் ஏன் சேர் குழிகள் ஏற்படவில்லை?" என்றான் நவாஸ்.

## பூமி தப்பியது!

"நல்ல கேள்விதான்! நாளொன்றுக்கு கோடிக் கணக்கான விண்கற்கள் நமது பூமிக்கு அருகே வருகின்றன. அவற்றின் வேகம் மணிக்கு 216000 மைல் கூட இருக்கும். இப்படிப்பட்ட பயங்கர வேகத்தில் அவை காற்று மண்டலத்தை ஊடுருவி வரும் போது வெப்பம் மேலிட்டு அவை எரிந்து கருகிவிடுகின்றன. இவற்றையே நாம் எரிநட்சத்திரங்கள் என்கிறோம். எரிந்தவை பூமியை அடைவதில்லை. தப்பித் தவறி எப்போதாவது இருந்து விட்டு சில கற்கள் பூமியை வந்தடைவதும் உண்டு. ஆனால் அவை மிகச் சொற்பமே. விண் கற்களின் கொடிய தாக்குதலுக்கு ஆளாகாமல் பூமி தப்பியதற்கு காற்று மண்டலம் செய்த உதவியே காரணமாகும்" என்றேன் நான்.

தூங்கி வழிந்துகொண்டிருந்த எனது சக ஆசிரியர் எழுந்து உட்கார்ந்து கொண்டே "சரி, சரி; சந்திர மண்டல ஆராய்ச்சி போதும் கிளம்புங்கள் தேநீருக்குப் போவோம்" என்றார்.

"நாங்கள் சென்று வருகிறோம்" என்றபடியே எனது மாணவரும் விடைபெற்றனர்.

# கண்டதும்...கேட்டதும்...

## ஒற்றுமையாக வாழ்வதெப்படி?

இந்தவருடத்துச்சமாதானப் பரிசைப் பெற்ற இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் உலகில் சமாதானம் நிலவுவதற்கு அருமையானயோசனை ஒன்றைக் கூறியிருக்கின்றார். உலக மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினரைப் போல ஒற்றுமையாகவாழ்ந்தால்தான் மனித சமுதாயம் உய்ய முடியும் என்றார் அவர்.

இந்த யுகத்தில் ஒரே குடும்பத்தினர் கூட ஒற்றுமையாக வாழ்கிறார்களென்று சொல்வதற்கில்லை; தம்பி நல்லாயிருந்தால் தமயன் வயிற்றெரிச்சல் படுகிறான். தமக்கைக்கு நல்ல வாழ்வு கிடைத்துவிட்டால் தங்கச்சிக்காரி பொறாமைப்படுகிறாள். இந்த லட்சணத்தில் ஒரே குடும்பத்தினரைப்போல ஒற்றுமையாக வாழ்தல் என்பதுகூட அர்த்தமற்றதாகி விடுகிறது.

வருகிற தை மாதத்தில் எட்டுக் கிரகங்கள் மகர ராசியில் கூடுகின்றபடியால் உலகின் பல இன்னல்கள் விளையலாமென்று சோதிடர்கள் கூறுகின்றார்கள்.

இந்த எட்டுக் கிரகங்களும் சும்மா இருக்கமாட்டாமல் ஏன்தான் ஒரே வீட்டில் கூட்டுக் குடித்தனம் நடத்த முற்படுகின்றனவோ தெரியவில்லை. அந்தக் கிரகங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை இந்த மனுஷ ஜென்மங்களுக்கிடையே ஏன்தானில்லையோ தெரியவில்லை. ‘செனற்’’ சபைக்கு ஒருவரைத் தெரிவு செய்யும் விஷயத்திலேயே நம்மவர்கள் நவக்கிரகங்களைப்போல வக்கலித்துக்கொண்டு ஆளுக்கொரு திக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது ஒற்றுமையாய் வாழ வேண்டுமென்று உபதேசிப்பதில் பயனுண்டா?

## பூமியைச் சுற்றி ஊசி வேலி!

எட்டுக் கிரகங்கள் ஒரே வீட்டில் குடியேறி உலகத்தை ஆட்டிப்படைப்பதற்கு முன்னரே உலகம் ஆட்டங் கண்டு விட்டது. ருஷ்யாக்காரன் உலக நாடுகளின் ஆட்சேபனைகளையும் எதிர்ப்புகளையும் கிஞ்சித்தேனும் பொருட்படுத்தாமல் தீபாவளிக்கு சீன வெடி வெடிக்கிறமாதிரி தன் கைவசமுள்ள அணுக்குண்டுகளை வெடிக்கச் செய்து பரிசோதனை நடத்துகிறான். தீபாவளியில் எல்லா வெடிகளும் வெடித்த பின்னர் யானைவெடியைக் கொழுத்துவதைப் போல ருஷ்யா தமது பலப்பரீஷையின் முடிவில்— அதாவது இம்மாதக் கடைசியில்— ஹிரோஷிமாவில் வெடித்த குண்டைப் போல 2500 மடங்கு பெரிய ராட்சத ஜலஜக் குண்டொன்றை வெடிக்கவைக்கப் போகிறார்களாம். அந்தக் குண்டு வெடிக்கும் அதிர்ச்சியில் ஒரே வீட்டில் றுடியேற எண்ணியிருக்கும் எட்டுக் கிரகங்களும் திக்குத்திசை தெரியாமல் சிதறிப்போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதற்கிடையில் அமெரிக்கா தனது கெட்டித்தனத்தைக் காட்டத் தொடங்கியிருக்கிறது. அது வானவெளியில் ‘‘ராக்கெட்’’மூலம் கோடிக்கணக்கான ஊசிகளைப் பரப்பிவிட்டிருக்கின்றதாம். இந்த ஊசிகள் 60 நாட்களில் பூமியிலிருந்து 2500 மைல் தூரத்தில் 5 மைல் விசாலமும் 25 மைல் ஆளமுமுள்ள ஒரு பாதையை அமைத்து அதன் வழியே பூமியைச் சுற்றிக்கொண்டிருக்குமென்று சொல்லப்படுகின்றது. பூமிக்கு வேலி அமைக்கும் இந்த வேலையில் அமெரிக்கா இறங்கி இருப்பதன் நோக்கம் என்னவென்பது போகப் போகத்தான் தெரியும்.

## நாலே நாலு புத்தகங்கள் போதும்.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு — அவர்களின் பெற்றோருக்கும்தான்— ஒரு சந்தோஷ சமாச்சாரம், பிள்ளைகளை நான்கு பாட புத்தகங்களுக்கு மேல் வாங்கச் செய்யும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள்மீது கல்வி இலாகா ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாம்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் எனக்கு மீண்டும் பள்ளியில் போய்ப் படிக்கவேண்டுமென்ற ஆவல் ஏற்படுகின்றது. நாங்கள் படித்த நாட்களில் மாதந் தவறாமல் சம்பளம் கட்டவேண்டும்; தூக்க முடியாமல் புத்தகங்களும் ‘கொப்பி’களும் வாங்கிக் கட்டித் தாவிக்கொண்டு போகவேண்டும், பெற்றோர் காசைச் செலவழிக்கத் தயாராக இருக்கும்போது நமக்கென்ன கவலையென்று இருக்க முடிந்ததா? இல்லை அவ்வளவு புத்தகங்களையும் படித்துத் தொலைக்கவேண்டியிருந்தது. நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்தாலும் பரீட்சையில் படிக்காத பாடங்களில்தான் கேள்விகள் வரும். இனிமேல் பள்ளி மாணவர்கள் பயப்படத் தேவையில்லை. ஆக நாலே நாலு புத்தகங்கள் இருந்தால் போதும் பன்னிரண்டு மாதங்களில் அந்த நாலு புத்தகங்களையும் மனப்பாடம் பண்ணிவிட்டால் சோதனையில் நூற்றுக்கு நூறு மாக்ஸ் வாங்க முடியாதா?

## பாஸ் பண்ணிப் பயனென்ன?

நாலே நாலு புத்தகங்களல்ல நாலு வகுப்பு மாத்திரம் படித்தால் போதுமென்பதே அடியேனின் அபிப்பிராயம். கல்வியும் இலவசம், புத்தகச் செலவும் சொற்பம் என்பதற்காக பிள்ளைகள் மூளையைக் குழப்பி பெற்றோரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி பீ. ஏ., எம். ஏ. என்று பாஸ்பண்ணி என்ன புண்ணியம்? இந்த நாட்டில் உத்தியோகம் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. வெளி நாடுகளுக்குச் செல்லலாமென்றால் அரசாங்கத்தின் கெடுபிடி அதிகமாகிக்கொண்டு வருகிறது. பிற நாடுகளிலுள்ளவர்கள் நினைத்த மாத்திரத்தில் சந்திரனுக்கும் செவ்வாய்க்கும்கூட கிளம்பிவிடுகிறார்கள். நாங்கள் பக்கத்திலுள்ள பாரத நாட்டுக்கு யாத்திரை போவதானால் கூட ஐந்தாண்டுக்கொருதடவைதான் அனுமதி கொடுக்கமுடியுமென்று அதட்டுகிறது அரசாங்கம். இந்த லட்சணத்தில் பிறநாடுகளில் பிழைப்புத் தேடிச் செல்வது சாத்தியமாகுமா?

இந்தியாவில் படித்துப் பட்டம் பெற்ற 500க்கு அதிகமான யாழ்ப்பாணத்து இளைஞர்கள் வேலையின்றித் திண்டாடுகிறார்களாம். இவர்கள் சும்மா இருக்க விரும்பாது ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து அதன்மூலம் தமது வருங்காலத்துக்கு வழிவகுக்க முயற்சிக்கின்றார்களாம். அவர்களின் கூட்டு முயற்சி வெற்றியளிக்கப் பிரார்த்திப்போமாக.

# பல்சுவைப் புதினம்

‘ரமணன்’

★ உலகம் போற்றிய ‘முட்டாளின் கூற்று!’

★ ஸ்டாலினை எதிர்த்துப் பேசாத காரணம்

★ அரசியல்வாதி இலக்கணம்

யாழ்ப்பாணத்தில் உள்ள படித்த மக்களும்சரி படிக்காத பாமரர்களும் சரி உலகம் போற்றும் உத்தமர்களையெல்லாம் நன்றாக அறிந்திருக்கிறார்கள் என பேராசிரியர் கல்கி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபொழுது கூறினாராம். அவர் இப்பொழுது இருந்தால் நிச்சயமாக தனது நாக்கை பிடுங்கிக் கொண்டே செத்து விடுவார் என்பது திண்ணம்.

ஏனெனில் தமது நாட்டிலே உலகம் போற்ற வாழ்ந்த ஒருவரை தெரியாமல், மற்றவர்களைப் பற்றி அறிந்து என்ன பிரயோசனம்? என்ன ஆச்சரியப் படுகிறீர்களா அப்படி உலகம் போற்ற வாழ்ந்த மனிதர் யார் என்று தானே?

அவர் ஓர் சிறந்த விஞ்ஞானி. இந்த உலகத்திலேயே உள்ள அத்தனை விஞ்ஞானிகளும் தப்பாக கூறியதை இடித்துரைத்து இறுதியில் வெற்றியும் பெற்றவர். அவரது பெயர்தான் ‘அலன் ஏபிரகாம்’ இவர் காரதீவிலே வாழ்ந்த ஓர் தமிழன்.

சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் செவ்வாய் கிரகத்திலேயிருந்து ஓர்வால் நட்சத்திரம் வளர்ந்து வளர்ந்து உலகை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்தநட்சத்திரம் நிச்சயமாக உலகை ஊடுருவிச் சென்று ஒருபாகத்தை அழிக்குமென எல்லா விஞ்ஞானிகளும் ஏகமனதாக கூறினார்கள். அவை பத்திரிகைகளிலும் வெளியாகின.

ஆனால் இந்த அலன் ஏபிரகாம் மட்டும் அந்த விஞ்ஞானிகளின் கூற்றெல்லாம் பிழை என்றும், தான் கணித்ததின்படி அவ்வால் நட்சத்திரம் ஒருபொழுதும் உலகை ஊடுருவாதெனவும் எல்லாப்பத்திரிகைகளிலும் எழுதினார் லண்டன் பத்திரிகையொன்று ‘முட்டாளின் கூற்று’ என்ற தலையங்கத்தின் கீழ் இவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை பிரசுரித்ததாம். எல்லோரும் இந்த தனிமனிதனைப் பார்த்து எள்ளிநகையாடினர். இருந்தாலும் யாழ்ப்பாணக் கல்லூரியில் படிப்பித்த இவர் தனது துணிபை இழக்கவேயில்லை!

மேல் நாட்டு விஞ்ஞானிகள் கூறிய நாளும் வந்தது. ஆனால் அந்த வால் நட்சத்திரம் உலகிற்கு வந்தால் தானே!

இவருக்குத்தான் வெற்றி! உடனடியாக இலண்டன் மன்னர் அலன்ஏபிரகாமிற்கு சேர் என்றபட்டத்தை இலங்கைகவனர் மூலம் அளித்து கௌரவித்தார். உலகவிஞ்ஞானிகள் சங்கமும் இவருக்கு F. R. A. S. எனும் பட்டத்தையும் கொடுத்து கௌரவித்தது. ஆனால்... இன்றைக்கு இவரை நினைவில் வைத்திருக்கும் ஒரே ஒரு இடம்...காரைதீவில் இருக்கும் அலன் ஏபிரகாம்ஒழுங்கை தான்.!

* *

திரு. குருஷேவ் ஒரு முறை பேசும்பொழுது ஸ்டாலினை ‘நெருப்பாக’ தாக்கிப்பேசினார். இவர் பேசிக்கொண்டிக்கும்பொழுதே அவரிடமோர் துண்டுக் காகிதம் சென்றது. அதிலே ஓர் கேள்வி: நீர் ஏன் இப்பொழுது ஸ்டாலினை தாக்குகிறீர்? அவர் இறக்க முன்னரேயே உமது தாக்கலையெல்லாம் காட்டியிருக்கலாமே?

குருஷேவ் இதைப் படித்துவிட்டு கேட்டாராம்.

‘‘யார் இந்தக் கேள்வியை எழுதியது?’’ எந்தப் பதிலுமில்லை! மீண்டும் கேட்டார்.

‘‘யார் இந்தக் கேள்வியை எழுதியது?’’ ஒருவரும் பதில் கூறவில்லை! அவர்களும் தான் என்னவென்று கூறுவார்கள்! குருஷேவை எதிர்த்த பின்னர் தான் ரஷ்யாவில் வாழமுடியாதே! உடனே குருஷேவ் சிரித்துக் கொண்டேபதில் சொன்னாராம்:- ‘‘நீங்கள் எதற்காகத் தயங்குகிறீர்களோ அதேபோலத்தான் நானும் தயங்கினேன்!

* *

சேர், வின்ஸ்டன் சேர்சிலை ஓர் அரசியல்வாதி எப்படியிருக்க வேண்டுமென்று கேட்டதற்கு அவர் கூறிய பதில் பின்வருமாறு:- முதல் அவன் இன்னும் ஆறுமாதங்களுக்குள் என்ன நடக்குமென கூறத்தெரிந்திருக்க வேண்டும் இரண்டாவதாக அவன், தான் கூறியது ஏன் நடக்கவில்லை என்பதற்குக் காரணம் காட்டவும் தெரிந்திருக்கவேண்டும்.

புதினம் 29-10-61

# நடிகையின் வீட்டில் நவராத்திரி கொலு!



பொதுவாகத் தென்னிந்தியத் தமிழர்கள் வீடுகளில் நவராத்திரி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். விதம் விதமான பொம்மைகளை படிக்கட்டுப்போன்ற மேடையில்அடுக்கிக் 'கொலு'வைப்பதுஇவ்விழாவில் முக்கிய அம்சமாகும்.பெண்களும் குழந்தைகளும்மிகவும்குதூகலமாக இந்தக் 'கொலு'வை அமைப்பார்கள். சினிமா நடிகர்களின் வீடுகளில் கொண்டாட்ட தினமென்ருல் சொல்லவா வேண்டும். இவ்வருடம் மிகச்சிறப்பாக கொலு வைத்தவர்களில் நடிகை சாவித்திரியும் ஒருவர். பிள்ளையார் கிருஷ்ணர், சிவன் முதலான சுவாமிகளின் பொம்மைகளுடன், புத்தர்,காந்திமுதலிய பெரியார்களின் பொம்மைகளும், சாவி கொடுத்தால் பல பல வேடிக்கைகள் புரியும் நவீன பொம்மைகளும் சாவித்திரி வீட்டுக் கொலுவில் இடம் பெற்றிருந்தன. அநேகமாக எல்லா சினிமா நடிக நடிகையரும் சினிமாத் தொழிலோடு தொடர்பு கொண்டவர்களும் சாவித்திரி வீட்டுக் கொலுவைப் பார்க்க வந்திருந்தார்கள். சாவித்திரி—ஜெமினிகணேசனின் மகள் விஜயாசாமூண்டீஸ்வரி எல்லோரையும் பன்னீர் தெளித்து உற்சாகமாக வரவேற்ருள்.

## எம். என். ராஜம் - பிரேம் நசீர் ஜோடி!

நடிகை எம். என். ராஜம் இரண்டாவது முறையாகத் திருமணம் செய்வதற்கு முன்பு மலையாளத்து நடிகர் பிரேம் நசீருடன் சில படங்களில் சேர்ந்து நடித்ததையும், அவர்கள் இருவரையும் பற்றி 'காதல்—கல்யாண'க் கதைகள் ரசிகர்களிடையே பரவியதையும் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

நீண்டகாலத்துக்குப் பிறகு இந்தச் சோடி மீண்டும் சேர்ந்து நடிக்கிருர்கள், விஜயா ஆர்ட் பிலிம்ஸ் என்ற ஸ்தாபனத்தாரின் முதல் படமான 'பிறந்தநாள்' என்ற படத்தில் இவர்கள் இருவரும் சேர்ந்து நடிக்கிருர்கள். கவர்ச்சி நடிகை சூரியகலா, தேவிகா முதலியவர்களும் இதில் நடிக்கிருர்கள். கே. நாராயணன் டைரக்ட் செய்கிருர்.

## எம். ஆர். ராதா நடிக்கும் புதிய படம்!

எம். ஆர். ராதாவின் காரியதரியதரிசி சாமண்ணு 'டவர் பிக்சர்ஸ்' என்ற பெயரில் ஒரு படக்கம்பனியை ஆரம்பித்திருக்கிருர். 'கற்பகம்' என்ற பெயரில் இவருடைய முதல் படம் தயாராகிறது. எம். ஆர் ராதா, எஸ். எஸ். ராசேந்திரன், விஜயலட்சுமி முதலியோர் நடிக்கின்றனர். திரைக்கதை, வசனம், டைரக்ஷ்ன் எல்லாவற்றையும் ஏ. பி நாகராஜன் பொறுப்பேற்றிருக்கிருர்.

## ஏ. வி. எம். சண்டைப்படம்

ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரின் குமாரர்களான முருகன், குமரன், சரவணன் ஆகிய மூவரும் முருகன் பிரதர்ஸ் என்ற படக்கம்பனியைத் தோற்றுவித்து கத்திச் சண்டைகள் நிறைந்த ஒரு படத்தை தயாரித்து வருகிருர்கள். ஏ. வி. எம். ஸ்ருடிடியோவில் தயாராகும் முதல் சண்டைப் படம் இது தான்.

இப்படத்தில் ஆனந்தன், அசோகன், இ. வி. சரோஜா, எம். வி. ராசம்மா முதலியோர் நடிக்கிருர்கள். பாடல்களை கண்ணதாசன் எழுதுகிருர்.

## ஈ. வி. சரோஜா பட முதலாளி ஆகிருர்!

சினிமா நடிகை இ. வி. சரோஜா தன் சகோதரருடன்சேர்ந்து இ.வி.ஆர். பிக்சர்ஸ் என்ற பெயரில் ஒருபடக்கம்பனிஆரம்பித்துள்ளார்.விரைவில்இ. வி. ஆர். பிக்சர்ஸ் தயாரிக்க இருக்கும் படத்துக்கான கதையை தாதா மிராசி எழுதியிருக்கிருர். இசைப்பகுதியை கே. வி. மகாதேவன் கவனிப்பார். ப. நீலகண்டன் படத்தை டைரக்ட் செய்வார்.

## லக்ஷ்மியின் நாவல் சிவாஜி—சரோஜாதேவி நடிக்கின்றனர்

ஆனந்த விகடனில் தொடர்கதைகள் எழுதிவந்த பிரபல நாவலாசிரியை 'லக்ஷ்மி' எழுதிய "பெண்மனம்" என்ற நாவல் ஏற்கெனவே தெலுங்குப்படமாக வெளிவந்துள்ளது. அதே கதையை தமிழ்ப் படமாக்குவதற்கு பிரபல டைரக்டர் பிரசாத் முன்வந்துள்ளார். இப்படத்தில் சிவாஜி கணேசனும், சரோஜாதேவியும் நடிக்கிருர்கள்; கருணாநிதி வசனம் எழுதுகிருர்.

# இத்தால் சகலரும் அறிவது....

### மகிழ்ச்சி!

தமிழரசுக்கட்சியில் பிளவு ஏற்படுமா? என்ற ஐயுறவுகளை கிளப்பி கடந்த இருவாரங்களாக "இரகசிய அடைப்புகளை" பிட்டுக்காட்டிய பெருமை 'புதினத்'துக்கு கிடைத்திருக்கிறது இச்சூடான செய்திகள் தமிழ்மக்கள் மத்தியில் வேகத்தைக் கிளப்பியிருக்கின்றது! எவை எப்படியிருந்தாலும் உண்மை வெளியாகி விட்டது! மகிழ்ச்சி. இந்தலட்சணத்தில் சமஷ்டி வழங்கப்பட்டால் பதவிகளுக்காகத் தலைமைப் பீடங்களில் கலவரம் நடத்த வேண்டியநிலை ஏற்பட்டாலும் வியப்பொன்றுமில்லை எனத் தோன்றுகிறது!

மட்டக்களப்பு. —செழியன். ஜே. பேரின்பநாயகம்.

### வெறுப்பு!

திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அவர்களின் அறிக்கையில் 'மட்டக்களப்புப் பொதுமக்கள் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்பதே எனது திடமான நம்பிக்கை' என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் மட்டக்களப்பு மக்களில் மிகமிகப் பெரும்பாலானேர் திரு. மாணிக்கத்தின் நியமனத்தை பூரணமாகவே வெறுக்கிருர்கள் என்பதை திரு. இராசமாணிக்கம் அவர்கள் கவனத்தில் கொள்வாராக.

மட்டக்களப்பு —த. கனகசபை.

### முறைப்பு!

ஒற்றுமைப் பட்டுள்ள தமிழினத்தை புரளிகளை அவிழ்த்து விட்டு பிரிக்க முயற்சிக்கிறீர்களா? தலைவர்களை மோதவிட்டு வேடிக்கை காட்ட நினைத்தது விவேகமானதல்ல. 22-10-61 புதினம் முன்பக்கச்செய்தியை தமிழரசுத் தலைவர் இராசனுர் 23-10-61 தினசரிகள் மூலம் ஆணித்தரமாக மறுத்துள்ளார்.

காலி. —குமாரச் செல்வன்;

### திகைப்பு!

தொடர்கதை 'அடுத்த இதழில் நிறைவுறும்' என்ற குறிப்பு எங்களை திடுக்கிடச் செய்து விட்டது! தயவுசெய்து முடிக்காதீர்கள். இன்னும் வளரட்டும்.

கண்டி. —சாந்தி—குமுதா!

### சோகம்!

பத்துக்கிழமைகளாக ரேசலினை எங்களுடன் பழக விட்டுவிட்டு, 'பட்'டெ நிறுத்தி விட்டால், அவளை எப்படி இனிச் சந்திப்பது?

உடுப்பிட்டி. —என். குமாரசாமி

### நகைப்பு!

"களனி நதி தீரத்திலே...!" அதற்கிடையில் வற்றக் கூடாது. "ஈழத்துச்சோமு" பேனவில் இனும் மையை ஊற்றிக் கொள்ளலாம்.

கொழும்பு, 2. —ஜே. கிருபைராசா.

### வியப்பு!

15-10-61-ல் வெளியான புதினத்தில் 'தமிழ்வாணன் புழுகு' என்ற தலைப்பில் வெளிவந்த கடிதம் அவர்மீது பற்றுள்ள அனைவரையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்துகிறது. கடலுக்கு அப்பாலிருக்கும் அவரின் பெயரால் இங்கு மன்றங்கள் நிறுவுவதும் நிறுவாததும் அவர் என்ன பார்த்துக் கொண்டா இருக்கிருர்? இலங்கைத் தமிழன்பர்கள் மீது அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையே அக்கடிதம் கல்கண்டில் வெளியானதற்குரியகாரணம். புகழ் ஏணியில் திகழும் அறிஞர் திலகமான தமிழ்வாணனுக்கு மாசுகற்பிக்க எத்தனிக்கும் நம் சகோதரர்களை என்னவென்று அழைப்பதென்றே தெரியவில்லை!

தெரனியகல; —என். சித்தன்;

### பரிதாபம்!

திருநெல்வேலியில் சைவவித்தியாவிருத்திச் சங்க மேற்பார்வையில் அரசினர் பண உதவியுடன் இயங்கிவரும் அனதைச்சாலையிலிருந்து 10—10—61 அன்று எதுவித முன்னறிவித்தலுமின்றி 18 வயதுக்கு மேற்பட்ட 15 மாணவர்கள் 24 மணி நேரத்தில் வெளியேற்றப்பட்டனர். அதில் 12 பேர் வருகிற டிசம்பரில் கல்விப் பொது தராதர பரீட்சைக்கு முதன் முதல் தோற்றுவார்கள்.

அனதைகளாகிய எங்களை கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போல—பரீட்சை எடுக்க முடியாமல்—24 மணி நேரத்தில் நட்டாற்றில் கைவிட்ட மர்மம் என்ன? அநாதைகளாகிய நாங்கள் செல்வது எங்கே?

யாழ்ப்பாணம் —க. இராசமணி



களனி நதிதீரத்திலே...(11)

# அஞ்சலி

"ஈழத்துச் சோமு"

திருகோணமலையில் நான் சென்று பதவி ஏற்றதைத் தொடர்ந்து சிறிது நாட்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் திடும் திடும் என ஒன்றன்பின் ஒன்ருக நடந்தன!

வடக்கில் மின்னல் தெற்கில் முழக்கம்! எந்நேரமும் மழைகொட்டத்தயாராகக்கருமேகங்கள் நாடுபூராவும் கவிந்திருந்தன!

அம்மா என்னை ஊர் வந்து விடும்படி தந்தி கொடுத்திருந்தா. பாவம்! எல்லாம் வெறும் பீதிதான்! ஆனுலும் எனக்கென நிச்சயிக்கப் பட்டிருப்பவளைப் பார்த்து விட வேண்டும் கதைத்து விட வேண்டும் என பல நாட்களாகவே என்னுள் ஆவல் துடித்தபடி இருந்ததால், அம்மா கொடுத்திருந்த தந்தியைச் சாட்டாக வைத்து நானும் என் சொந்த ஊர் சென்றிருந்தேன்.

நாடு இருந்த சூழ் நிலையில் நான் தன் கூட இருப்பது என் அம்மாவுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. சாதாரண நாட்களில் என்ருல் எங்களூரில் அடைந்தபடி இருப்பது எனக்கு கஷ்டமாக இருக்கும். பொழுது போகாது. என்னுடையவளாக ஆக்கப்பட இருப்பவள் ஊரில், எனக்கு அயலில் இருந்ததால் அடிக்கடி அவளிடம் போய்க் கதைத்து, ரசித்தபடி இருப்பது எனக்கு ஆனந்தமாகவே இருந்தது.

நம்மை மறந்து நாட்கணக்கில் கதைத்தபடியேயிருந்தோம்! அவள் நான் எதிர்பார்த்தபடி நல்ல அழகி என்பதோடு அடக்கமானவளாகவும் இருந்தாள். சிறிது படித்தவள் என்பதால் கிராமப் பெண்கள் போல கட்டுப்பெட்டியாக இருக்கவில்லை. தங்கம்மாப்பாட்டியும் என் அன்னையும் நாமிருவரும் இப்படி எம்மை மறந்து நேசிப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டிருக்க வேண்டும்.

அந்த ஐப்பசியிலேயே திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென தங்கம்மாப்பாட்டி தன்து மகனுக்கு கடிதம் எழுதி விட்டா.

எங்கள் மகிழ்ச்சிக்கு— இல்லை; எத்தனையோ லட்சம் ஜனங்களின் ஆனந்தத்திற்கு, அமைதிக்கு உலை வைப்பது போல, இலங்கை வானில் கவிந்திருந்த கருமேகங்கள் ஒன்றுடன் ஒன்று ஆக ரோசமாக முட்டி அகங்காரமாக மோதி பலத்தமழையாக கொட்டத் துவங்கிவிட்டன! தொடர்ந்து பயங்கரப் பிரவாகம்— பயங்கரப் பிரவாகம்! எத்தனை உயிர்கள், உடமைகள் அதில் அடித்துச் செல்லப்பட்டனவோ?

கொழும்பிலிருந்த நடராசனின் நிலமையறிய நான் தவியாகத் தவித்தேன். நடராசனின் தாய் தலையிலும் நெஞ்சிலும் அடித்து ஓலமிட்டபடி புழுவாகத் துடித்தாள்!

தெரிந்தவர்களுக்குச் செய்தியனுப்பி நடராசனைப்பற்றி விசாரிக்க முடியவில்லை! தெலிபோன் பேசித் தெரிந்து கொள்ள இயலவில்லை! எங்கும் பிரளயகாலப் பீதி கவிந்து அனைவரும் பிரமை பிடித்து தோன்றினுர்கள்!

என் மனம் ஒவ்வொரு நிமிடமும் திக் திக் என அடித்துக்கொண்டது. தினமும் 'நடா'வுக்கு எதுவும் நஷ்டம் இழைத்து விடாதே! ''தெய்வமே!" என வேண்டிக்கொண்டது.

நடாவிடமிருந்து எதுவித தகவலுயேயில்லை!

கப்பல்களில் வந்திறங்கியவர்கள் அனைவரையும் விசாரித்தேன் நடாவின் தலைக்கறுப்பைக்கண்டதாக யாரும் சொல்லவில்லை!

"நடா! நடா! நீயெங்கே?" என மனம் அடித்துக் கொண்டது.

"ஐயோ! ஐயோ!" என்று கதறும் அவளின் தாய்க்கிழவிக்கு எப்படியும் ஆறுதல் கூற முடியவில்லை. நான் ஓடிப்போய் நடராசனைத் தேடிவரவேண்டுமென மனம் துடித்தது; ஆனுல், குமுறிப்பாய்ந்து வரும் வெள்ளத்துக்கு நான் ஒரு தனி மனிதன் ஈடுகொடுத்து, எதிர் நீச்சலடித்து அக் கரை சேர இயலுமா? அம்மாவும்கமலாவும் தங்கம்மாப் பாட்டியும் அந்தவேளையில் நான் கொழும்புக்குச் செலக் கூடாதென முன்னுக்கு வந்து ஒரேயடியாக மறித்துவிட்டார்கள் அழுதபடி!

ஒரு கிழமை ஓடிவிட்டது!...பத்து நாட்கள் பறந்துவிட்டன!..... ...இன்னும் அவனிடமிருந்து செய்தியில்லை!......எங்கும் அழுகையும் ஓலமும்! தப்பி ஓட்டி வந்தவர்களுடைய இல்லங்களில் ஒரேசோகக்கதை!

பதினைந்து நாட்களுக்குப் பிறகு பொலிஸ் ஜீப் ஒன்று நடராசனின் வீட்டுக்குப் பறந்து வந்தது. நான் ஓடோடிச் சென்றபோது பொலிஸ்காரர்தெரிவித்த செய்தி என் இதயத்தைப் பிளக்கச் செய்துவிட்டது! ஆமாம்: நடராசனின் தாய் ''மகனே! மகனே''! என அலறிக்கொண்டு அந்தக் கணத்திலேயே துடித்து இறந்துவிட்டாள்.

நடராசனின் சடலம் பல காயங்களுடன் பத்து நாட்களின் முன்பு களனி நதியில் கிடந்ததாகவும், மிக அழுகியிருந்ததால் அதை பொலிஸ் பொறுப்பில் புதைத்து விட்டதாகவும் செய்தி கொண்டுவந்திருந்தனர்!

என்னருமைத் தோழ!- வேண்டிய வேண்டிய போதெல்லாம் உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த உத்தம நண்பா! உன் முடிபு இதுதானே? நான் எச்சரித்தபடி-உன் காதலி ரேசலின் பயந்தபடி - நீ பலியாகி விட்டாயே?

* * *

நிலமை சீரடைந்துநான் கொழும்புக்குச் சென்றபோது, கேள்விப்பட்டவை யாவும் பரிதாபமானவை; கொடுமையானவை. ரேசியிருந்த வீடு தரைமட்டமாக சாம்பலாகி இருந்தது. ரேசியின் முடிபு என்ன? தகப்பன் எங்கே? -அயலவர்களையும் தெரிந்தவர்களையும் தேடி விசாரித்தேன். அவர்கள் சொன்னவை திகைக்க வைத்தன!- ரேசலினுடைய வீடு நள்ளிரவில் தீக்கிரையாக்கப்பட்டபோது கிழவனுர் அதற்குள் பொசுங்கி விட்டதாகவும், நடாவும் ரேசியும் தப்பியோடிச் செல்கையில், தொடர்ந்து சென்ற குண்டர்கள் நடாவைக் காயப்படுத்திக் கொன்றபின் ஆற்றில் எறிந்து விட்டதாகவும், ரேசலினை மாறி மாறிக் கற்பழித்தபின் மயக்கமாக நடுத்தெருவில் போட்டுவிட்டுச்சென்றதாகவும் சொன்னுர்கள்!

கொழும்பிலிருந்த நான் திரும்பும்பொழுது அந்தக் களனி நதி இரைந்தபடியே இருந்தது. நாட்டில் நிகழ்ந்த கோரத்தை எண்ணி எண்ணி அந்தக் கல்யாணி ஆற்றன்னை பொறுக்க முடியாது 'ஐயோ ஐயோ!' எனக் கதறி அழுதுகொண்டிருந்தாள்!

* * *

நான் பழைய நினைவுகளில் ஊறிப்போய்விட, கமலாவும் நன்ருக உறங்கிப் போய்விட்டாள். அவளைத் திரும்பிப் பார்த்தேன். பாவம்; மிகவும் களைத்து மெலிந்து இருந்தாள். ஆனுல் முகத்தில் ஒரு புதிய பொலிவு; மிடுக்கு! அவளுக்கருகில் எங்கள் மகன் தன் தாயின் அணைப்பில் இதமான தூக்கத்திலிருந்தான்.

தாயையும் மகனையும் அந்தக் கோலத்தில் வைத்துப் பார்க்க—அந்தப் புதிய காட்சி — என் உள்ளம் பூராவும் மகிழ்வை நிறைத்தது! கமலாவின் நெற்றியில் துளித்திருந்த வியர்வைகளை ஒற்றிவிட்டு விசிறினேன்.

மாமி, அறைக்குள் கிடந்த துணிமணி, பெட்டி முதலியவற்றை பொறுக்கி எடுத்து சுறுசுறுப்பாக அடுக்கி வைத்து தயார் செய்துகொண்டிருந்தார்.

ஆஸ்பத்திரி அலுவலகத்துக்குச்சென்று பணத்தைச் செலுத்தி துண்டை வெட்டிக்கொண்டு அறைக்கு நான் திரும்பியபோது கமலா உடுப்பணிந்து கொண்டு மகனைத் தூக்கி மடியில் வைத்தபடி கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். என்னைப் பார்த்து முறுவலித்தாள்.

"இஞ்சாருங்கோ!...அந்த ரேசலினைக் கண்டு, நன்றி சொல்லிவிட்டு'— நாங்கள் போகிறதாக சொல்லிவிட்டு வாருங்கோ' அத்தான். அவ எவ்வளவு கவனமாக உதவி செய்தா தெரியுமோ?" கமலாவின் வார்த்தைகளில் கடமையுணர்ச்சி பொங்கி நின்றது.

ரேசலினைத் தேடிக்கொண்டு சென்றேன். அப்போது அவளுக்கு ஓய்வு நேரமாம். அதனுல் தனது விடுதி அறைக்குச் சென்றுவிட்டாள். அந்த விடுதி ஆஸ்பத்திரி வளவுக்குள் தான் இருந்தது.

அங்கே சென்று விசாரித்து அவளது அறைக்குள் நுழையும்போது—

வாசலிலே நான் நின்றுவிட்டேன்! அவள் பிரார்த்தனையில் இருந்தாள். வெள்ளை உடையணிந்து முழந்தாளில் நின்றவண்ணம் அவள் கண்களை மூடி பிரார்த்தனை செய்துகொண்டிருந்தாள். எதிரே கிறீஸ்து நாதர் படமும், நடராசனின் புகைப்படமும் இருந்தன.

அவள் முகத்தில் எவ்வித விருப்புவெறுப்போ சலனமோ இல்லை! மோனத் தவத்தில் ரேசலின் இருந்தாள்!

நான் திரும்பி வந்துவிட்டேன்.

காரில் நாங்கள் வீடுநோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோது கமலா சொன்னுள் "இனிமேலும் நீங்கள் நேரமில்லை நேரமில்லை என்று கணக்குவிட முடியாது. தம்பியும் பிறந்துவிட்டான். அந்தப் புழுகத்தில் ஒரு பெரிய நாவல் எழுதிவிடவேண்டும். என்ன அத்தான்?" என்று தனது நெடுநாளைய நச்சரிப்பை அந்த வேளையிலும் ஞாபகப்படுத்தினுள்!

"ஓமோம் குஞ்சு! நிச்சயமாக. !அதற்கு ஏற்ற கரு கிடைத்துவிட்டது." நான் உற்சாகமாகச் சொன்னேன்.

"உங்கள் நாவலைஒரு புத்தகமாகப் போட்டு விட்டு, தம்பி வளர்ந்த பிறகு கொடுத்து 'உன் அப்பா எழுதிய புத்தகம். படியடா ராசா!' என்று சொல்லுவன்'' கமலா குழந்தையை நெஞ்சுடன் அணைத்தபடி 'களுக்'கென்று சிரித்துக்கொண்டு சொன்னுள்'

பகிடியாக அவள் சொன்னுலும், என் எழுத்திலும், எங்கள்குடும்ப எதிர்காலத்தின்மீதும் கமலாவுக்கு இருக்கிற ஆசையைக் கண்டு நான் பூர்த்துப்போனேன்!

(நிறைவுற்றது)

Registered as a newpaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## 'கற்பனை' என்று தான் சொல்லுகிறோம்; ஆனாலும்...?

# தற்கொலை செய்ய முயன்றவள்!

இலங்கைத் தீவின் ஒரு முக்கிய மாகாணத்தின் தலைப்பட்டினம் அது. அங்கே ஒரு பொலிஸ் ஸ்ரேசன்-'ஏ'பிரிவைச்சேர்ந்தது.

அந்த நகரத்தின் முனிசிபல் எல்லைக்குள் ஒதுக்குப் புறமாக ஒரு குப்பம்—கூலிக்காரர்களும், சமுதாயத்தின் அடித்தட்டிலிருப்போரும் வசிக்கும் பிரதேசம். குப்பை மேட்டில் குண்டுமணி ஜ்வலிப்பதுபோல அந்தப் பிரதேசத்தில் ஒரு பதினெட்டு வயதுப் பருவப் பெண் இயற்கை குவித்திருந்த எழில் பூண்டிருந்தாள். அவள் நிறத்தில் கறுப்பிதான். ஆனாலும் தளதள என்ற உடம்பு; நாற்புறமும் சுழன்று கொத்தும் எலக்ட்ரிக் கண்கள்! வெடிக்கும் பாளையின் சிரிப்புக்களை அடிக்கடி உதிர்ப்பாள்! கன்னியல்ல அவள்-ஏற்கனவே கலியாணம் முடித்தவள். குழந்தையும் ஒன்று பெற்றெடுத்துவிட்டாள். கணவன் உயிரோடு இருக்கிறான். தொழிலாளி என்பதால், அடிக்கடி அவன் 'தண்ணி'யைத் தொட்டுக் கொள்வதுண்டு.

ஒரு இரவு தம்பதிகளுக்கிடையில் ஏதோதகராறு! அதன் உச்ச கட்டத்தில் அவன் அவளை எட்டி அடித்துவிட்டான்!

பத்திரகாளியாகி பக்கத்திலிருந்த பொலிஸ் நிலயத்துக்கு அவள் படையெடுத்து விட்டாள் - கணவனுக்கெதிராக குற்றம் பதிவு செய்ய!

தளுக்கு மேனியும், ஜொலிக்கும் பார்வையும் அந்தப் பொலிஸ் சார்ஜண்டுக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது. ஆதரவு தருவது போலப் பேசி கண்ஜாடை காட்டினார் சார்ஜன்ட். அவள் அழகியல்லவா? 'ஆமாம், சம்மதம்' என்பதுபோல முறுவல் பூத்தபடி தலையைக் குனிந்து கொண்டாள்.

கணவனுக்கு பொலிஸ் வீட்டில் கட்டிவைத்து அடித்தனர். காரிகையின் கொட்டம் தினமும் வளர்ந்துவிட்டது. யாரும் அவளை எட்டிப்பிடிக்க முடியாது. முட்டிக்கொள்ள முயற்சிக்கப்படாது! அப்படியானல் ஆபத்து!—பொலிஸ்காரர்களின் நேசத்துக்குரியவளாச்சே!

சார்ஜன்டில் ஆரம்பித்து தினமும் அவள்பலபொலிஸ்காரர்களின் கைகளுக்கு மாறிவிட்டாள்! பொலிஸ்காரர்கள் மாறிமாறி அவளை தங்கள் விடுதிக்கு அழைத்துச் செல்கின்றனர்; அவள் கணவனோ வேறு உறவினரோ அவளின் நடத்தைபற்றி எதிர்த்துக் கேட்கப்படாது. அந்தப் பிரதேசத்தின் அல்லிராணி அவள் இப்போது!

இந்த 'இரவுராணி' இன்ப வாழ்க்கை நீண்டகாலத்துக்கு நிலைக்கவில்லை. அவளிடம் இன்பம் பெற்ற காவலர்கள் அவள் வயிற்றிலே பாரத்தை ஏற்றிவிட்டார்கள்.

அழகு அழிந்தது! ஒய்யாரம் குலைந்தது! ஆதரவு குறைந்தது!

அல்லிராணி மெல்லிராணியானுள். உலகம் காறி உமிழ்ந்தது. திகைத்தாள் செய்வதறியாது மலைத்தாள்.........முடிவு?

ஆம். தற்கொலை!

பேதையின் அந்த முயற்சியும் பலிக்கவில்லை...... அவள் அனுபவிக்க வேண்டியது இன்னும் இருக்கிறதோ, அவளை அனுபவிக்க வேண்டியவர் இன்னும் இருக்கின்றனரோ!




## 5-ம் வகுப்பு - வினுப்பத்திரங்கள்.

பரீட்சையில் வருவனபோன்ற மாதிரி வினுப்பத்திரங்களை இந்த மூன்றும் தவணைக் காலத்தில் மாணவர் செய்து பழகுவதனுல், பரீட்சையில் மிக இலகுவாக அவர்கள் தேறமுடிகிறது, தமிழ் (பாஷை), கணிதம், சூழல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தனித் தனியாக புத்தக உருவில் இவ் வினுப்பத்திரங்கள் உள்ளன. **விலைகள் மிகக்குறைவு.**

(1) வினுப்பத்திரம் - தமிழ் (பாஷை) சதம் 60    (3) வினுப்பத்திரம் - சூழல் சதம் 60

(2) வினுப்பத்திரம் - கணிதம் சதம் 60    (4) வினுப்பத்திரம் - ஆங்கிலம் சதம் 60

(புதிய முறைப்படி திருத்தியபதிப்பு)

எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமைலோலன்)

இலங்கை எங்குமுள்ள அநேக பாடசாலைகளில் இவ்வினுப் பத்திரங்கள் வருடந்தோறும் உபயோகப்பட்டு வருகின்றன. நீங்கள் இதுவரை உபயோகிக்காவிட்டால் உடனே எழுதுங்கள்.

(தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு)

### ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை

226, காங்கேசன் துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'